REGD No M 4642

திராவிட நாடு

விலை அணா 2.
சிலோன் 15 சதம்

மலர் 10. | 18–11–51 | இதழ் 21.

கழக மாளிகை காணீர்!



திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையக் கட்டிடம், சென்னை ராயபுரம் 24, சூரியநாராயண செட்டித் தெருவில் ரூ. 30000 செலவில் 5–11–51ல் வாங்கப்பட்டுவிட்டது. மாளிகை மிகப் பெரியது என்பதை வெளிப்பார்வையே சொல்லும். இதில் மிகவிசாலமான தாழ்வாரங்கள், கூடங்கள், அறைகள், இரண்டு மாடிகள், மிகப் பெரிய தோட்டம், கிணறு, குழாய், மின்சார வசதிகள் அத்தனையும் நிரம்பியிருக்கின்றன. இனி தி. மு. க. தலைமைக் காரியாலயம் இக்கட்டிடத்திலேயே பணியாற்றும்.

அண்ணனும்—தங்கையும்

—✲✲—

அண்ணா, தங்களைப்போல் சிறந்த முறையில் ராஜ்ய பரிபாலனம் செய்பவர் யாருமே இந்தப் பரந்த உலகில் இல்லையென்று நிச்சயமாய்க் கூறலாம்.

தங்காய், நீ என்மீதுள்ள சகோதர வாத்ஸல்யத்தினால் இவ்வாறு கூறுகிறாய். நானென்ன அவ்வளவு பிரமாதமான விஷயங்களைச் சாதித்து விட்டேன்! இந்தப் பாரத கண்டம் தோன்றிய நாள்முதல், எத்தனை எத்தனையோ மணிமுடி தரித்த மன்னர்கள், வீரதீர பராக்கிரமச் செயல்கள் எவ்வளவோ புரிந்திருக்கின்றனர்.

அதென்ன 'மணிமுடி தரித்த மன்னர்கள்' என்று ஏக்கம் கலந்த குரலில் கூறுகிறீர்கள்! கற்கள் இழைத்த கிரீடம் தங்களுக்கு இல்லாததாலா? தாங்கள்தான் இந்நாட்டு முடிசூடா மன்னராயிற்றே—ஏன் உங்களுக்கிந்த வியாகூலம்!

எல்லாம் வெறும் பகட்டுதான், இப்பொழுது. அன்றொரு நாள், என்னை எல்லோரும் ஆசியாவின் ஜோதி என்று அன்புடன் அழைத்தனர். அதைச் சுட்டிக்காட்டி, நீ கூட என்னை அடிக்கடி பரிகசிப்பதுண்டு. ஆனால், இன்றைக்கோ, என்னை சர்வாதிகாரியென்று மக்கள் வெறுக்க ஆரம்பித்து விட்டனர். நானென்றும் மாறிவிட்டதாக எனக்குத் தோன்றவில்லை.

அப்படியெல்லாம் மனம் கலங்காதீர்கள். நம்மிடம் ராஜ்யலக்ஷ்மி வந்துவிட்ட பிறகு, பிரஜைகள் என்ன நினைக்கிறார்களென்று ஒவ்வொரு காரியத்திலும் சஞ்சலப்படுவது புத்திசாலித்தனமல்ல. குலைக்கிற நாய்க்கு ஒரு எலும்புத்துண்டு போட்டால் தானே அடங்கிவிடுகிறது.

நீ சொல்வது சரிதான், இருந்தாலும், மனம் நிம்மதியடைய மாட்டேனென்கிறது.

தங்களுக்குத் தெரிந்ததுதான்—இரண்டாண்டுகள் கடந்துவிட்டதால் மறந்துவிட்டீர்கள்போலும்! அமெரிக்கா சென்று வாஷிங்டன் நகரில் தங்குங்கள் ஒரு மாதம். ஜோதியென்ற பட்டம் உறுதிப்படுத்தப்பட்டுத் திரும்பி வரலாம், இந்நாட்டிற்கு.

அதெனை அவ்வளவு சுலபமாய்ச் சொல்லிவிட்டாய்—அமெரிக்காகள் தான் இப்பொழுது என்னைக் கண்டித்துப் பேசுகிறார்களாமே'

அதெல்லாம் வெறும் பத்திரிகைச் சாடுகள். உண்மையில், அமெரிக்க ஆளவந்தார்களுக்கு உங்கள் மீது அபார மோகம். நடுவில் ஏதோ கொஞ்சம் தவறான அபிப்பிராயங்கள் தலைதூக்கின, அறியாமையின் காரணத்தால். ஆனால், அவற்றை முளையிலேயே கிள்ளி விட்டேன். உங்கள் பிரதிநிதியாக நான் இரண்டாண்டுகள் அமெரிக்காவில் இருந்தபொழுது சும்மா தூங்கிக்கொண்டிருந்தேன், என்று நினைக்கிறீர்கள்! இல்லவே இல்லை! அமெரிக்க ஆட்சியாளருக்கு, உங்கள் அயல்நாட்டுக்கொள்கைபற்றிய உண்மை விளக்கம் கொடுப்பதற்கு நான் எவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டேன் தெரியுமா?

கேள்விப்பட்டேன். நீ என் தங்கை என்பதற்காக, நமது வெளிநாட்டிலாக்கா அதிகாரிகள் உன்னை அபாரமாகப் புகழ்ந்து துதிபாடினார்கள் என்று, நான், சிலசமயங்களில், சந்தேகப்பட்டதும் உண்மைதான்.

நான் எது செய்தாலும், உங்களுக்குப் பூரண திருப்தி ஏற்படுவதேயில்லை! நான் வாலிபப் பருவத்தினளாய் இருந்தபொழுதும், என் திறமையைச் சந்தேகித்தீர்கள். அரசியல் கடலில், அழுந்தியமுழுந்தி எழுந்திருந்த எனக்கு — எத்தனையோ, திமிங்கலங்களையெல்லாம் மடக்கிய எனக்கு — சின்னஞ்சிறு நெத்திலிமீன்களைப் பிடித்துப் போடுவதுதானா பிரமாதம்? நான் அமெரிக்காவிற்குச் சென்ற ஒரு மாதத்திற்குள்ளாகவே, முக்கியமான அமெரிக்கர்கள் அத்தனை பேரையும் என் வலைக்குள் இழுத்து விட்டேன், தெரியுமா?

கோபித்துக் கொள்ளாதே—சந்தேகமற விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற் நம்பிக்கையில்லாவிட்டால், நா உன்னை அமெரிக்காவிற்கு அனுப் பியிருப்பேனா? உனக்கு என்னைவி எத்தனையோ மடங்கு அதிக அ பவமும், புத்திகூர்மையும் உ டென்பதை நான் என்றாவது ஒ ததுண்டா?

அடடா, ஓரேதிரியாய்ப் புக ஆரம்பித்துவிட்டீர்களே! உங் மனதிற்குக் கொஞ்சம் ஆறுதல இருக்கட்டுமே என்பதற்கா நானும் வேலைசெய்தேனென்பதை கொஞ்சம் சொல்லிக்கொண்டே அதற்காக, இப்படியா புகழ்வ தலையில்லாமல் வாலாட மு யுமா? உங்கள் கீர்த்தியை வை துக்கொண்டுதானே நானும் உ ஏற முடிந்தது!

அதிருக்கட்டும், உன்னுடை உல்லாச வாழ்க்கையைப் பற் அடிக்கடி பத்திரிகைகளில் எழு கிறார்களே—இவ்வாறு பிறர் பேசு படி நடந்துகொண்டது அவ்வள பொருத்தமானதாயில்லை என் நான் நினைக்கிறேன்.

இதற்கெல்லாமா நீங்கள் அசங் விடுவது? கையில் காலணாகூட இ லாத பிச்சைக்காரப் பத்திரி நிருபர்கள், பொறாமையின் கார மாகக் கண்டபடியெல்லாம் எழு வதை நீங்கள் நம்பி நலியக் கூடா உல்லாசவாழ்வு என்று இந்த பத் ரிகைப் பதர்கள் எழுதுகின்றனவே இதுகளுக்கு என்ன தெரியு ராஜாங்க மாளிகையின் வாசத்தை பற்றி? எத்தனை விருந்துகள், எ தனை சங்கீதக் கச்சேரிகளுக்கு சென்று என் அரிய காலத்தைவீ கழிக்கவேண்டியிருந்தது தெரியுமா நான் விரும்பாத எத்தனையோ ம தர்களிடம் புன்னகை முகங்காட்டி பேச வேண்டியிருந்தது யாருக்கு தெரியும்? ஒவ்வொரு மணிக்கு ஒவ்வொரு புதிய 'மேக்கப்' செய் கொள்ளவேண்டியதின் சிரமம் உ களுக்கு எப்படித் தெரியப் போ றது? நாகரீக அமெரிக்க சொசைட்டியில் பழகுவதென்ப கிள்ளுக் கீரையல்ல!

எல்லாம் எனக்குத் தெரிந் தான். நீயாவது இப்பொழு அமெரிக்காவிற்குச் சென்றாய் நானோ குழந்தைப் பருவத் லிருந்தே இங்கிலாந்தில் படித்த

ஏழையின் கண்ணீர்

அண்ணல்

'ஐயா, சிறுபெண் ஏழை
என்பால் மனமிரங்காதா
அந்தோ—வயறு வாடுகின்றேன்
சாவு, வராதா!''

கையிலே சட்டிதாங்கி, இதுபோலக் கதறும் காட்சிகளை நாடெங்கும் காண்கிறோம். ரயிலை விட்டிறங்கினால், பஸ்களில் பிரயாணம் செய்யும்போது எங்காவது பஸ் நிற்கும்படி நேர்ந்தால்—அந்த இடத்தில், சினிமாக் கொட்டகைக் குமுன், ஓட்டலுக்கு எதிரில் எங்கே போனாலும் 'ஐயா, சாமி!' என்ற பரிதாபக் குரலுடன், ஒருவர் இருவரல்ல, ஒரு கூட்டமே ஓடி வருகிறது!

"சாமி! காலணா......''

"சாமி! சாமி!, எனக்குப் போடுங்கோ''

"இட்லி வாங்கி திங்கிறேன்க... இன்னும் காலணா கொடுங்கோ''

இதுபோன்ற, வேண்டுதல்களோடு, அவர்கள் ஓடிவருகிறார்கள், போட்டி போட்டுக்கொண்டு. குழந்தையைக் கையிலே ஏந்திய தாய்! — குழந்தையின் பரிதாபத்தைக் காட்டி, நமது இதயத்தில் கனலை மூட்டி, 'காசு, சாமி' என்று, கதறுகிறாள். கண்ணை மூடிய ஒரு கிழவனைக் காட்டி, 'ஐயா! குருடன்' என்று கூறி காசு கேட்கிறார்கள்! சென்னை மவுண்ட்ரோட் பக்கம், பஸ் ஏறப்போனால் பார்க்கலாம் —சின்னஞ்சிறு குழந்தைகள், கண்ணிலே பீளை வடிய, அதோடு கலந்து நீர் வடிய, வயிற்றிலே ஓங்கி ஓங்கி அடித்துக்கொண்டு பார்ப்போர் உள்ளம் பதறும்படி ஓடிவருவர்!

அவர்கள் நம் முன் நின்று கதறும் கோரநிலையைக் கண்டால், நம்மை அறியாமலேயே மனம் உருகும். இன்னும் பலப்பல இடங்களிலே, பிணமான குழந்தைகளை இரண்டணா ஓரணாவுக்கு வாங்கி, அதைத் தெருவீதியிலே கிடத்தி, போவோர் வருவோரின் கவனத்தை இழுத்து நாளொன்றுக்கு எட்டணா பத்தணா சம்பாதிக்கும், காட்சிகளை இன்றும் காண்கிறோம்!

பிச்சைக்காரர்கள், இவர்கள்!— வாழ வகையில்லாததால் ஓடும் சட்டியும் தாங்கி, கிளம்பியவர்கள்! ஒரு வழியும் தெரியாததால், தாய் தந்தையர் கைவிட்டதால், தெருவிலே விடப்பட்ட சின்னஞ்சிறு குழந்தைகள்!

* * *

தினசரி, பத்திரிகைகளைப் புரட்டினால் திடுக்கிடும் தகவல்களைக் காண்கிறோம் "பத்துவயதுச் சிறுவன், மணிபர்சைக் களவாடினான்—கோர்ட்டில் தண்டனை'' இது போன்ற தலைப்புகளுடன். போலீசார் தொடர, வீதிகளிலே இளங் குழந்தைகள் மட்டுமல்ல வயது வந்தோர்கூட, அழைத்துச் செல்லப் படுகின்றனர், ஆயிரக்கணக்கில், ஒவ்வொரு நாளும்—"இவன், கோயில் திருவிழாவில் சங்கிலி அறுத்தான்'' "இந்த ஆள், ஒரு பெரிய இடத்தில் கன்னமிட்டான்'' "இவன் குற்றப் பரம்பரை—ஆறுமுறை சிறைக்குச் சென்றவன்'' "இவனுக்கு வழிப்பறிக் கொள்ளையே தொழில்'' என்கிற, பற்பல, குற்றச்சாட்டுகள்மீது. அவர்கள் திருடர்கள்! வாழமுடியாத காரணத்தால், பிச்சை எடுப்பதைவிட, திருடுவது மேல் என்கிற எண்ணத்தோடு, கன்னக்கோலையும், கள்ளிசட்டையும் நம்பிவிட்டவர்கள். சமுதாயத்தில், இதுவே தம் தொழிலாக, மேற்கொள்ளுமாறு விரட்டப்பட்டவர்கள். இந்த வேதனை யுருவங்களின் வகையும் விதமும் எண்ணிறந்தவை!

* * *

"அதோ, போகிறாளே! யார் தெரியுமா? பத்தினி சொன்னால் மழை பெய்யுமாமே! இவள்வாய் அசைத்துக்கூட 'மழையே—பெய்' என்று சொல்லவேண்டியதில்லை. உடம்பை, ஒரு உலுக்கு உலுக்கினால் போதும், மழை சரசரவெனப் பெய்யும்!''

இதுபோன்ற ஏளனச் சொல்லுக்கு ஆளாகும், இளமங்கையர் கூட்டம், ஏராளம். அவர்கள் வழுக்கி விழுந்தவர்கள், வாழ வழி தெரியாததால், உடம்பை முதலாகவைத்து, அதனால் தேகமெங்கும் 'மேகங்களை' உண்டாக்கிக் கொண்டு, உருமாறி, தினசரி ஒரு நோயாய், மணிக்கொரு புருடனாய், அந்தி எப்போது வரும் சந்திக்குப் போகலாம் என காத்துக் கிடப்பவர்கள். இவர்களைக் கண்டால், வறண்டுபோன உதடுகளிலிருந்து வெடிக்கும் புன்சிரிப்பைப் பார்த்தால் இதயம் குமுறும். இந்த இளமங்கையர், காலாடிகளுக்கும் கள்ளர்களுக்கும், கண்டுபிடிக்கப்பட்டுவிட்டால் போலீசாருக்கும், இடையே நின்று கதிகலங்கும் சோகக் காட்சிகள்! தண்டிக்கப்பட்டு சிறைச்சாலைக்குள்ளே 'விபசாரி' என்ற ஏளனச் சொல்லுடன், தள்ளப்படும்பொழுது, 'அம்மா! ஐயோ!' என்று அந்த ஏழைகள் எழுப்பும் கூக்குரல்!

* * *

பிச்சைக்காரர்கள் —
திருடர்கள் —
விபசாரிகள் —

சமுதாயத்திலே நச்சுமரங்கள் போல, குறிக்கப்படவேண்டிய, இந்தப் பட்டியல்வரிசை, ஏழ்மையிலிருந்து உண்டாகிறது. ஏழை—எனவே, பொல்லாததென வர்ணிக்கப்படும் வழிகளிலாவது புகுந்து வாழவேண்டும் என்ற துணிவு பெறுகிறான். சமுதாயத்தின் மேல் மாடியிலே யிருப்பவர்கள் இந்தப் பரிதாபப் பட்டியலைப் பார்த்தால் "தூ! தூ!'' என, ஏளனம் செய்வர், கேலிபுரிவர், காரி உமிழ்வர்! ஆனால் தனது மாடிஉயர்ந்த காரணத்தால் தான் அவன் வயிறு காய்ந்தது என்பதை எவரும் நினையார்! தனது, பெட்டி பெரிதாகிய காரணம்தான், இந்த வாழமுடியாவர்கள் பட்டியல் வளர்ந்தது என்பதை நினைத்தாலும், வெளியிடார்.

நாலைந்து பெரிய மனிதர்கள் மத்

தியில் ஒரு ஏழை வந்து நிற்கிறான், அவன் அங்கிருப்பவரில் ஒருவரின் எடுபிடியென்று வைத்துக்கொள்ளுங்கள். அவன் அடங்கி ஒடுங்கி. வேலை செய்வதைக் கண்ட அவன் எஜமான். பெருமிதத்தோடு தன் நண்பர்களிடம் சொல்லுவார். "மிஸ்டர்! இந்தப் பய ரொம்ப நல்லவன். என்ன சொன்னாலும் தட்ட மாட்டான். ரொம்ப மரியாதை. எஜமான விசுவாசம் ஏராளம். ஏழையானாலும் என்ன யோக்கியன் தெரியுமோ?"

எஜமான், தனது யோக்கியம் பற்றி பேசுவதைக் கேட்கும் போது, அந்த ஏழையின் உள்ளம் குளிரும். 'இன்னும் நல்லபெயர் எடுக்கவேண்டும்' என்று, பயபக்தியோடு வேலை செய்வான்.

பணக்காரர்கள், உலகில் ஏழைகளை அடக்கி, தமது கட்டுக்கோப்பில் வைத்திருக்க, இரண்டுவித வழிகளைக் கைப்பற்றுகிறார்கள். ஒன்று, அவனைத் தட்டிக்கொடுப்பது. இரண்டாவது, அவனை மிரட்டுவது!

"ஏழை—ஆனாலும், யோக்கியன்!"

"ஏழையாப் பொறந்தது நம்ப தலைவிதிங்கிறது, அவனுக்குத் தெரியும்!"

"ஆண்டவன் அவன் தலையிலே ஏழையாப் பொறக்கணும்னு எழுதிட்டான்—என்ன செய்யறது. அவன் எழுத்தை அழிச்சு எழுதவா முடியும்?"

இதுபோன்ற, வார்த்தைகள் மூலம், மேட்டுக் குடியினர், ஏழைகளை அடக்கி வாழச் செய்கிறார்கள். ஏழையும், இந்த வார்த்தைகளால், மகிழ்ந்து 'எல்லாம் அவன்விட்ட வழி' என்று இருந்துவிடுகிறான். ஆனால் இந்த நிலையில் நெடுநாளிருந்தும், எஜமான் அட்டகாசம் தாங்க முடியாததால், பல நாள் பொறுத்தும் தாளாத ஏழை என்றாவது ஒருநாள் தலை நிமிர்கிறான்! எதிர்க்கத் தொடங்குகிறான்—எஜமானனை! அப்போது, என்ன நேருகிறது?

மேட்டுக் குடியினரின் மிரட்டல், நிமிர்ந்த ஏழையை வதைக்கிறது. இந்த சமயத்தில், சர்க்காரின் சட்டம், மேட்டுக்குடியினருக்கு சாதகமாக ஓடி வருகிறது, துணைபுரிய.

"அவன் [illegible] எடுத்தான்! தடுத்தேன்! அடித்தான்" என்று முதலாளி புகார் செய்ய, போலீசார் உதவிக்கு வர, நீதிமன்றத்தில் தண்டனை விதிக்கப்பட்டு, ஏழை அழுத கண்ணீரோடு, சிறைச்சாலைக்குள் பூட்டப்படுவான்.

இதற்குத் துணையாயிருப்பது, சர்க்கார். அவர்கள் சொல்வது, சட்டம். அதன்படி நடவடிக்கை எடுக்கக் காரணமாயிருப்பது, போலீஸ் படை.

ஒரு அறிஞர் கேட்டார், ஒரு போது, என்னைப் பார்த்து:

"பணம் படைத்தோரைப் பார்த்து, உங்களுக்கு விதிக்கப்படும் எல்லா வரிகளையும் நீக்கி விடுகிறோம் — அதேபோல, போலீஸ் படையையும் கலைத்து விடுகிறோம் என்று சர்க்கார் கேட்டால், முதலாளிகள் என்ன சொல்வர்?"

கேள்வி கேட்ட அந்த அறிஞரே சொன்னார், "முதலாளிகளுக்கு முதலில் ஆனந்தம் வரும், ஒரு வரி கூட நாம் கொடுக்கவேண்டிய அவசியமில்லையாமே என்கிற அகமகிழ்வால். ஆனால், 'போலீஸ் படையையும் கலைத்து விடுகிறோம்' என்ற வார்த்தைகளைக் கேட்டதும், கலங்கிப் போவார்கள்." என்பதாக.

முதலாளித்துவம் தனக்குற்ற சகாவாக சர்க்காரின் சட்டங்களையும் அதைப் பாதுகாக்கும் போலீசாரையும் நம்பியிருக்கிறது. தன் வருமானத்தில் எவ்வளவு தொகையையும் போலீசுக்காக, வரியாகத் தர முதலாளிகள் சம்மதிப்பர்!

போலீசாரின் கடமைகளைப் பற்றிக் கேட்டால், சமுதாயம் ஒழுங்காக நடைபெறுமாறு பாதுகாப்பது என்று, பதில் சொல்வர் எவரும்.

"சரி. சமுதாயம் ஒழுங்காக நடைபெறுவது என்றால் எப்படி?"

"களவு கொலை போன்ற தீமைகளைத் தடுப்பது. பாப காரியங்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது."

"சரி! எது, பாப காரியங்கள்?"

"திருட்டு, கன்னம் வைப்பது, கொலை செய்வது, ஒருவரை ஏமாற்றிப் பணம் பறிப்பது, இன்னும்..."

"போதும், போதும்! போலீசா[illegible] சமுதாயம் பாதுகாக்கப்பட வேண்டியது. இல்லையா?"

"ஆமாம்!"

"அதாவது, திருட்டு, கொலை போன்ற காரியங்களை நடவாமல் தடுப்பது"

"ஆமாம்!"

"திருட்டும் கொலையும் ஏன் நடக்கிறது?"

"இதென்ன கேள்வி! திருடர்களும் கள்ளர்களும் மலிந்து, நாச வேலைகளில் நாட்டம் செலுத்துவதால்"

"ஏன், அவர்கள் மலிந்தார்கள்; ஏன், நாசவேலையில் 'நாட்டம் செலுத்துகிறார்கள்?,,

நமது கேள்விக்கு இப்போது, பதில்வர சிறிது தாமதாகும். 'வறுமை—ஆகவே தான்" என்று கூற, சிறிது தயங்குவார். திருட்டும், கொலையும்—சமுதாயத்தின் அமைதிக்குப் பங்கம் விளைக்கும் காரியங்கள் தான். ஆனால் அவைகளில் ஏன், அவர்கள் ஈடுபடுகிறார்கள்.

வறுமை! ஏழ்மை!!

வாழமுடியவில்லை, அவனால் ஆகவே, தீயகாரியங்களில் செல்கிறான். கன்னக்கோலையும், கரு இருளையும் நம்புகிறான். மனித இதயம் மாத்துப் போகிறது.

மிருகமாகிறாள்—பெண். கும்பி கழுவ, எதையாவது செய்யவேண்டும் என்கிற மனநிலை வந்துவிடுகிறது, மாலை மலர்வதை அந்த மதிமுகவதி எதிர்பார்க்கிறாள்! இருட்டுவது எப்போது, என்று ஏங்கத் தொடங்குகிறான், கள்ளன்!

இந்த ஆபத்துகளிலிருந்து, தப்ப பணம் பெருத்தான் விரும்புகிறான்,

விற்பனைக்குத்தயார்!

சிந்தனையைத் தூண்டும் அற்புத ஏடு!

உரிமைப்போர்

ஆசிரியர் வ. சங்கரநாராயணன்

விலை அணா 12

விற்பனையாளருக்கு 25% கழிவு முன்பணங்கட்டிப் பெற்றுக் கொள்க.

விவரங்கட்கு: வ. சங்கரநாராயணன்

இன்பக்கடல் நிலையம்

16, இராமநாய்க்கன் தெரு,
நுங்கம்பாக்கம் சென்னை 6.

பக்கபலமாக இருக்கிறது, சர்க்காரும், அவர்தம் சட்டமும், அதை பாதுகாக்கும் போலீசும்.

இதை அழகாக வர்ணிக்கிறார், பேரறிஞர் பெர்னாட்ஷா ஓரிடத்தில்;

"ஏழை, அழுகிறான், அவனது குழந்தைகளோ பட்டினியால் பதைத்துத் துடிக்கின்றன. அவர்களுடைய பசிபோக்கி, துன்பம் துடைக்கக்கூடிய பணமோ, பணக்காரர்களின் ஆசை நாய்களுக்கு ஆடம்பரமாகச் செலவழிகிறது. ஏழையின் குழந்தை கஞ்சிக்கழுகிறது! பணக்காரன், நாய்க்கு கறிமேல் கறிபோட்டுக் கொழுக்கவைக்கிறான் நாய்க்குப் போகும் பணத்தைக் கண்டுபதறி, ஏழை எழும்பிவிடாமல், பலாத்காரமாக ஏழையை அடக்க உதவுவதே போலீஸ் ஏற்பாடு"

* * *

"குற்றம் புரிவோரைத் தண்டிக்காமலா விடுவது?"

"நாட்டில் அராஜகம் பெருகிவிடுமே!!"

"கொலையும் காமமும் களவும் கலாட்டாவும் நிறைந்தால் நாகரீக நாடு சகிக்குமா?"

இதுபோல, பலர் பேசக் கேட்கிறோம். நாட்டில், குழப்பம் ஏற்படாமல் அமைதி ஏற்படவேண்டுமென, அவர்கள் சொல்கிறார்கள். அமைதி, அவசியம்தான். ஆனால் அது ஏற்பட, என்றும் போலீசும் சட்டமும் இருந்துவிட்டால் போதுமா!

நான் வீட்டிலே தூங்கிக்கொண்டிருக்கிறேன். நள்ளிரவிலே ஒரு கள்ளன் புகுந்து என் மனைவியின் வைரநகைகளைத் திருடிவிடுகிறான். திருடனைக் கண்டுபிடித்து நான்கு ஆண்டுகள் தண்டனை தந்துவிடுகிறது, சர்க்கார் — தண்டிக்குமுன் அவனிடமிருந்து உண்மையைப் பெற, போலீசார் உரித்து எடுத்துவிடுகிறார்கள் அவனை. திருட்டுப்போனது, என் நகைகள்! அதனால் திருடனுடைய வாழ்க்கையில் நாலாண்டுகளைச் சட்டம், பறித்துவிடுகிறது. சிறைக்குள்ளே, அவனை வாடச் செய்கிறது!

அவனை, திருடும்படிச் செய்தது, அவனுடைய வறுமை. வறுமையின் விளைவால் வாடினான்! யாரும் உதவவில்லை. பட்டினிகிடந்தான்— பரிதாபப்படவில்லை. வாழமுடியாத நிலையில் அவன், மிருகமானான். இருக்குமிடத்தைக் கண்டு, எடுக்கத்துணிந்தான். நான், வைர நகைகள் போட்டேன் - மனைவிக்கு; பணமிருக்கிற காரணத்தால். வைரம், எனக்கு வரும் அபரிமித சம்பாதித்தியத்தின் விளைவு. ஆனால், அவனோ! ஏழை—வயிற்றுப் பசிக்கே வழியில்லாதவன்.

ஆனால் இருவரும் மனிதர்கள்; வாழப்பிறந்தவர்கள்.

இந்நிலையில், என்னுடைய அதிகச்செல்வத்தால் வாங்கப்பட்ட வைரநகைகளைத் திருடினான் — அவனுடைய வாழ்க்கையை வளமாக்கிக்கொள்ள.

என்னிடம் இருந்தது, அவனிடம் இல்லை. நான் வாழ்கிறேன் — அவன் வாழமுடியவில்லை. நான் பணக்காரன்—அவன் ஏழை.

இந்த நிலையில், திருடிய அவனை பிடித்து நான்காண்டுகள் தண்டனை வாங்கித்தந்ததால், எனக்கு என்ன லாபம்? கோட்டைச் சுவர்க்குள்ளே மண்வெட்டி தாங்கி, தன் மனைவி மக்களைக் காணாது, தன்னந்தனியனாய் அந்த ஏழையை, அடைக்கும்படிச்செய்ததால் என்ன லாபம் எனக்கு?

ஏழையின் குமுறலைத் தடுத்தது சட்டம் — அந்த ஏழையைச் சிறையிலடைத்ததால், பல ஏழைகளுக்கு எச்சரிக்கை செய்கிறது, "யாராவது இப்படிச் செய்தால் உங்களுக்கும் இதே கதிதான்" என்று. இந்த எச்சரிக்கையால், பல ஏழைகள், பயப்படுகின்றனர். அவர்கள் பயம், என்னைப் பாதுகாக்கிறது. என் செல்வத்தின் மீது நான் சுகமனுபவிக்க, அவர்கள் எப்போதும் போல வேதனைப்படும்படியான சூழ்நிலை, நீடிக்கிறது. நான் ஒரு தனி நபர்—ஆனால் என்னைப் பாதுகாக்க, திருடர்கள் என் வீட்டில் புகுந்து கொள்ளையடிக்காமலிருக்க, போலீசார் உதவி புரிகிறார்கள். உதவிபுரியும்படியான போலீசாரை நியமித்து சர்க்கார் கண்காணிக்கிறது.

பல போலீஸ் படைகளை நிறுவி, கண்காணிக்கும்படி சர்க்காருக்கு கவலையும் பொறுப்பும் ஏற்படும் காரணம், சர்க்காரில் அமர்வோர் பணம் படைத்தோரின் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள்.

ஆகவே, தங்களைக் காத்துக்கொள்ள—தங்கள் வீட்டுமாடிவளர, படுக்கையிலே தூவப்படும் பன்னீரின் மணம் குறையாமலிருக்க, இத்தகைய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்கிறார்கள்!

இந்தப் பாதுகாப்புக்காக, பலர் அடக்கப்படுகிறார்கள். பலரது வாழ்வு பொசுக்கப்படுகிறது. ஏழையின் குரல், ஒடுக்கப்படுகிறது. அவன் அழ அழ, இவர்கள் ஆனந்த கீதம் பாடுகிறார்கள்! ஏழை, பசியால் அலைகிறான். அவனது மனைவி பரத்தை ஆகிறாள். குழந்தைகள் திருடர்களாகின்றனர். சமுதாயம் தீங்குக்கிடங்காகிறது. புலியும் நரியுமாக, மனிதர் உலவ ஆரம்பிக்கின்றனர்! கொலை! கொள்ளை! களவு! கலவரம்! குழப்பம்!!

இந்தக் கொடுமை சமுதாயத்தில், படர்வது காண சஞ்சலப்படுவதில்லை—மாடி வீட்டினர். இந்த அநாகரீகம், நம் நாட்டின் புகழைக் குறைப்பதாயிற்றே என்று கருதுவதில்லை. மனோகரிகளுடன் பேசுவதும், மந்தகாசமாய்த் திரிவதும், போதுமென்று நினைக்கின்றனர்! இந்த மனோபாவம் கொண்டோர் சிறிது நினைத்துப்பார்க்கவேண்டும்.

"அதோ ஏழை! அவன் நிலையில் நான் இருந்தால்?"

"அதோ போகிறாள், ஒரு விபசாரி. அவளது கதிக்கு என் தங்கை கொண்டுவரப்பட்டிருந்தால்"

"போலீசாரால் இழுத்துச் செல்லப்படுகிறானே, ஒரு சிறுவன், அவ

(8-ம் பக்கம் பார்க்க)

"தளபதி"

[தமிழ் வார இதழ்]

ஆசிரியர்: கோ. இறைமுடிமணி

தனிப்பிரதி 1-அணா

ஆண்டு சந்தா ரூ 3.

விற்பனையாளர் இல்லா ஊர்கட்கு முன்பணம் கட்டுவோர் தேவை.

முகவரி:-

"தளபதி"

228/16 கோவிந்தப்பநாய்கன் தெரு

சென்னை 1.

திராவிடநாடு

காஞ்சி] 18—11—51 [ஞாயிறு

கொடுவாள் தடுப்பீர்!

—※—

"கத்தரிக்கோல் பாய்ந்ததா?"

"பாய்வதா! படமே, போய்விட்டது பிரதர்!"

"ஏன்?"

"என்னமோ! இருபத்தெட்டு இடங்களைக் கத்தரிக்கணுமாம். இல்லாட்டா, 'சென்சார் சர்டிபிகேட்' தரமுடியாதாம்."

"இருபத்து எட்டு இடங்களா?"

"ஆமாம், பிரதர். அடிவயிற்றையே கலக்குது. ஆறுலட்சம்—கொடுத்திருக்கேன். எல்லாம் போய்டும் போலிருக்கு!"

* * *

கடந்த சில மாதங்களுக்கு முன், தென்னாடெங்கும், வெற்றிகரமாக ஓடியது, ஒரு திரைப்படம். அதைப் பார்த்த பத்திரிகைகளெல்லாம் வெகுவாகப் பாராட்டின. "காதலில்லாத புதுக் கதை!" "நல்ல கொள்கைகள் சொல்லும் திரைச் சித்திரம்" என்றெல்லாம், பார்த்தோர் புகழ்ந்தனர். மக்களும், திரள் திரளாகச் சென்று களித்தனர்!

ஆனால், அது சினிமாத் தியேட்டர்களுக்கு வருமுன், தாண்டிவர நேர்ந்த சங்கடங்கள் மிகப்பல வாகும். படம் எடுத்து முடிந்தாயிற்று. படத்தை, இலட்சக்கணக்கில், விலை கொடுத்தும், பலர் வாங்கி விட்டனர். இந்நிலையில், திரையிடப்படும் தேதியும், முடிவு செய்யப்பட்டு "சென்சார்" ஆகவேண்டி, சென்சார் போர்டு முன் காட்டப்பட்டது.

அன்றைய தினம்தான், நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல, தலையில் கைவைத்த வண்ணம், வந்த சோகத்தோடு புலம்பினார், படத்தை வாங்கியவர்.

படம் வெற்றிகரமாக ஓடும், என்று அவர் நம்பிய காட்சிகள் அத்தனையையும் கத்தரிக்கச் சொன்னாராம்—சென்சார் போர்டு தலைவர் எப்படியிருக்கும், படம் எடுத்தவருக்கு!—தலையிலே கைவைத்துக் கொண்டு தவியாய்த் தவித்தார்! போய் வாதாடினார்! என்னென்னமோ எடுத்துச் சொன்னார்! பலன், நினைத்த அளவு கிடைக்கவில்லை, என்றாலும், மறுமுறையும் படத்தைப் போட்டுப் பார்த்து, கத்தரிக்கோல் வீசவேண்டிய இடங்களைக் குறைத்தனராம்!

* * *

சினிமாத் தொழில் இன்றைய தினம், மக்களின் சிந்தையைக் கவர்ந்ததோர், தொழிலாகிவிட்டது. நாட்டின் முக்கிய துறைகளிலே அதுவும் ஒன்றாகப் பரிணமித்துக் கொண்டிருக்கிறது. தினசரி வாழ்க்கைச் சுழலில் வாடுபவன், சிறிது நேரமாவது தனது மனத் துயரங்களை மறக்கவும், இசை நடனங்களைக் கண்டு களிக்கவும், திரைப்படத்துக்குச் செல்கிறான். அவன் தரும் ஒரு சில அணாக்களில், ஓரளவு மனதுக்குத் தெம்பும், உள்ளத்துக்குத் தெளிவும் பெற்றுத் திரும்புகிறான்.

சினிமாத்துறையில், ஓரிரு ஆண்டுகளாக ஒரு புது மலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. முன்பெல்லாம், புராணக் கதைகளை மக்கள் விரும்புகிறார்கள் என்று காரணங் காட்டி, ஏராளமான புராணக்கதைகள் படங்களாக்கப் பட்டன. அந்நிலை, இந்த ஓரிரு ஆண்டுகளில் மாறி, மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் படங்கள் உருவாகத் துவங்கியிருக்கின்றன. பொழுது போக்கோடு சமுதாயத்துக்குத் தேவையான நல்லது கெட்டதுகளை எடுத்துக் காட்டி, மனித இதயங்களின் உளப் பண்புகளை காட்சிகளாக அமைத்து, உலக முன்னேற்றத்தைச் சுட்டிக் காட்டி, மக்களுக்குத் தேவைப்படும் நல்ல கருத்துக்களைக் கூறும் கதைகளை, படமாக்கும் நிலை மலர்ந்திருக்கிறது.

சமுதாய நல்வாழ்வே முக்கியமெனக் கருதுவோர், இந்த மலர்ச்சியை வரவேற்கவே செய்வர்—தமது ஆசைகளை மக்களிடம் பரப்பும் பணி, மக்கள் சிந்தையைக் கவர்ந்த இத்துறைமூலம், அதிகரிப்பது காண. காடும் மேடும் சுற்றி கனிகாண விரும்புபவனுக்கு காத்திலேயே கனி வந்து விழுந்தால், மகிழாமலா இருப்பான் — வெறியனையும் பித்தனையும் தவிர?

ஆனால், 'இன்றைய ஆட்சி, இந்த மறுமலர்ச்சியைக்காண மருள்கிறதென்பது, அதன்போக்கால், தெரிகிறது. முன்பு, நாம் குறிப்பிட்டோமே ஒரு படம், அதில் ஒரு காட்சி, ஒரு சிறுவன் தோட்டத்திலே காய்த்த கனியொன்றை பிச்சைக்காரிக்குப் பறித்துத் தர, அதைக்கண்டு தோட்டத்துக்குரியவன் வந்து கோபிக்க, அப்போது 'ஒரு பழம் போனால் என்ன?' என்று அச்சிறுவன் தோட்டக்காரனைப் பார்த்து கேட்பதுபோல், எடுக்கப்பட்டிருந்தது.

இதில், கம்யூனிச கோட்பாடு இருப்பதாக் கூறப்பட்டதாம்!

இதுபோல, பலப்பல காரணங்களைக்காட்டி, 'காரசாரமான வசனம்,' 'இது சட்டப்படி தவறு' என்றெல்லாம் கூறப்பட்டு, பல்லாயிரக் கணக்கான ரூபாய்களில் படமாக்கப்பட்ட காட்சிகள், வீசியெறியப் படுகின்றன — ஒரு சிறு உத்திரவு மூலம்.

தணிக்கை போர்டு குழுவினரின் ஆசாபாசங்களையொட்டியே, கதைகள் படமாக்கப்படவேண்டும் என்கிற இந்தநிலையையே, படத்துறையில் ஈடுபட்டோர், சங்கடத்தால், வெறுத்ததுண்டு — மனங்கசந்து பேசியதுண்டு.

ஆனால், இப்போது படத்துறையில் ஈடுபட்டோரின் வாயையும் கையையும் கட்டிப்போட வழிமுறை வகுக்கப் போகிறார்களாம்!

இந்திய தணிக்கை போர்டுத்தலைவராகயிருக்கும் அகர்வாலா, ஒரு யோசனையொன்றை வெளியிட்டிருக்கிறார். அந்த யோசனையை விரைவில், டில்லி சர்க்கார், சட்டமாக ஆக்கினாலும் ஆக்கலாம்.

அதன்படி யாராவது திரைப்படம் எடுக்க விரும்பினால், முதலில் அவர்கள் படமெடுக்க விரும்பும் கதை, அதன் வசனங்கள் முதலியவைகளை, தணிக்கை போர்டாருக்கு

ப்பித்து அவர்கள் அனுமதியைப் பெறவேண்டும்.

இந்த யோசனை, விரைவில், சர்க்காரலும் ஏற்கப்படுமாம்!

* * *

இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பெல்லாம், தணிக்கை போர்டை நியமிக்கும் அதிகாரம் அந்தந்த மாகாண சர்க்கார் வசம் இருந்தது.

இந்த அதிகாரத்தையும், டில்லி, ஒரு உத்திரவு மூலம் கைப்பற்றிக் கொண்டதோடு, தனது பார்வைக்குக் கீழ் மூன்று வட்டார அதிகாரிகளை நியமித்து, புது ஏற்பாட்டைக் கொண்டு வந்தது.

டில்லியின் இந்த நடவடிக்கையை படத் தொழிலில் ஈடுபட்ட பலர் எதிர்த்தனர்.

ஆனால், இப்போது, அடுத்த கட்டமாக, கதைகளையும் வசனங்களையும் கூட காட்டி அனுமதி பெறவேண்டும், என்கிற யோசனைக்கு வந்திருக்கின்றனர்!

டில்லியின் இந்த முடிவு, படத் தொழிலில் ஈடுபட்டோரின், சுதந்திரத்தை மட்டுமல்ல பறிப்பது — எல்லாவற்றையும் டில்லியிடம் ஒப்படைக்கும் காரியமுமாகும்.

இந்த யோசனை, சட்டமானல், டில்லி, தன் இஷ்டப்படி எவரையும் ஆட்டுவிக்கும் கதாசிரியர்களின் கற்பனையும், புதுமலர்ச்சி காண விரும்புவோரின் ஆசையும், அந்தந்த வட்டார தணிக்கை போர்டாரால்தான் வரையறுக்கப்படுமாம்!

பல கோடி மக்களின் உள்ளங்கள் ஒருசில தனி மனிதரின் தணிக்கைப்படி தான் நிர்ணயிக்கப்பட வேண்டுமாம்!

இந்த உத்திரவு சட்டமாக ஆகிவிடுமானல், படத்துறை, ஒரு பம்பரம் போலவும், அதை ஆட்டிவைக்கும் கயிறுபோல சர்க்காரின் அதிகாரமும் வந்துவிடும்.

இதனல், இப்போது ஏற்பட்டிருக்கும் புதுமலர்ச்சி, வளராமல், டில்லி ஆதிபத்தியம், தன் அம்புகளை வீசலாம்.

அவர்கள் காட்டும் வழியிலேயே, இயந்திரம் போல, படமெடுப்போர் இயங்கும்படி செய்யப்படலாம்.

மக்கள் சிந்தனையைக் கவருமளவுக்கு வளர்ந்துவிட்ட இத்துறையை தமதாக்கி, அதன் மூலம், அறிவு வளர்ச்சிக்கேற்ற பணிகளைப் புரியத் தைரியமில்லாத சர்க்கார், வளரும் அறிவுப் பணியின் மீது பாணத்தை வீசி அடக்க முனைவது, அக்கிரமம்! அநீதி!!

இதனல் விளையும் ஆபத்துக்களை எண்ணிப்பார்த்து, தடுப்பதற்கான வழி வகைகளை படத்தொழிலில் ஈடுபட்டோர் காணவேண்டும்.

டில்லி வளருகிறது! அதன்
ஆதிபத்தியம் ஒரு கொடுவாள்!
அதைத் தடுக்கவேண்டும் —
இன்றேல் நம் வாழ்வு அழியும்.
சுயமரியாதை பலியாகும்!
சுதந்திரம் நாசமாகும்!
நாம் நடைப்பிணமாவோம்!

—❀—

★ மத்தாய் ★

டாக்டர் ஜான் மத்தாய், டில்லி சர்க்காரின் நிதி அமைச்சராக இருந்து ஓராண்டுக்கு மேல் பணியாற்றியவர். அவர், இப்போது இந்திய பார்லிமெண்டுக்கு, செல்ல முடியாது தடுக்கப்படுகிருர் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் படி.

மத்தாய் — ஒரு காங்கிரஸ்காரரல்ல; காங்கிரஸ் முகாமிகளின் கீழ்த்தரமான செயல்களை, அடிக்கடி இடித்துரைத்து பேசி வருபவர். அவர் திருவாங்கூரைச் சேர்ந்த கோட்டயம் தொகுதியில் நிற்கப் போவதாக தனது அபேட்சா பத்திரத்தைத் தாக்கல் செய்திருந்தார். ஆனல், அவர் டில்லி சட்டசபைக்கு நிற்கக் கூடாதென தேர்தல் அதிகாரி, அவரது அபேட்சையை நிராகரித்துவிட்டார்.

காரணம், அவர், டாடா கம்பெனியில் டைரக்டராக இருப்பதால், அந்தக் கம்பெனியில் சர்க்காருக்கும் பங்கு இருப்பதால், அவர் அபேட்சை சட்டப்படி செல்லுபடியாகாதென்றும், தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மறுப்பை எதிர்த்து, மத்தாய் திருவாங்கூர் நீதிமன்றத்தின் உதவியை நாடினர். நீதிமன்றமும், தேர்தல் அதிகாரியின் உத்திரவை யேற்று, மத்தாய்க்குப் பாதகமாகத் தீர்ப்பு வழங்கியிருக்கின்றனர்.

மத்தாய், தமக்கான நீதி பெற சுப்ரீம் கோர்ட் செல்லப்போவதாக அறிகிறோம்.

மத்தாய் போன்றோர், சிறந்த பொருளியல் நிபுணர்கள் ஆவார்கள். அத்தகையோர், பார்லிமெண்டுக்குச் செல்ல முடியாமல், சட்டம், தடுக்கிறது. ஆனல், நேருவோ 'காங்கிரஸ் லேபிளில் ஒன்றுந் தெரியாதவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதைவிட, திறமையுள்ளவர்களை பார்லிமெண்டுக்கு தேவை" என்று பேசி வருகிறார்.

ஆனல் திறமையுள்ளோர் அபேட்சகராக நிற்க — மறுக்கப்படுகிறார்கள்! என்னதான் விந்தையோ, இது!!

★

ஏமது புதுப் பரிசுகள்!

காதலி பர்ட்டியாகிருள்!

காதலன் கபோதியாகிருன்!!

சிந்தனையை அள்ளும்,
சிறந்த காதல் சித்திரம்.

சி. என். ஏ. தீட்டிய

★ **கபோதிபுரக்காதல்**
ரூ 1—4—0

*

அறிவு ஒளி வீச, அரும்பாடுபட்டோர் பலரின் வரலாறு நிரம்பிய கருத்துப் பேட்டகம்

கே. ஏ. மதியழகன்
தீட்டிய

★ **அறிவின் தூதர்கள்**
ரூ 0—12—0

*

அடுத்தது!

மு. கருணாநிதி
தரும்
அற்புத காதல் ஓவியம்

★ **இரத்தக் கண்ணீர்** ★

திராவிடப்பண்ணை
தெப்பக்குளம் திருச்சி

5-ம் பக்கத் தொடர்ச்சி

ளைப்போல என் தம்பியின் நிலேயும் விடப்பட்டிருந்தால்!''

இந்த எண்ணம் சிறிது விநாடி, மேட்டுக்குடியினருக்கும், அவரது பிரதிநிதிகளான மந்திரிமார்களுக்கும் ஏற்பட்டால், நாடு இவ்வளவு சீர்கேடா அடையும்!

இந்த ஆண்டு 'கல்கி' மலரிலே, மத்யசர்க்காரின் மாஜி மந்திரியான சி. ஆர். ஒருகதையொன்றை எழுதியிருக்கிறார். அக்கதை, ரஷ்யசிறுகதை எழுத்தாளர் ஒருவரின் கதையைத் தழுவியாதாகயிருந்தாலும், கதையின் முடிவுரையில் அன்பர் ஆச்சாரியார் குறிப்பிட்டிருக்கும் சில வாக்கியங்கள் நம் சிந்தையைக் கவர்ந்தன.

ஒரு ஏழைக் குழந்தை திருடனுகித்திண்டாடியது பற்றி, எழுந்த கதை அது.

அதன் முடிவிலே, அவர் குறிப்பிடுகிறார்:

''அருமை மக்களே! பிச்சைக்காரக்குழந்தைகள் என்றால் வெறுக்காதீர்கள். ஏதோ, நாம் தப்பிவிட்டோம். ஏனென்றால் நாமும் அவர்களைப் போல ஆகியிருக்கவேண்டியவர்கள் தான்''

இந்த நினைவு, மந்திரிபீடத்திலிருந்தபோது அல்ல—இப்போது வந்திருக்கிறது. என்றாலும், ''நாமும் அவர்களைப்போல பிறந்திருக்கவேண்டியதுதான். ஏதோ, தப்பிப் பிறந்துவிட்டோம் என்று அவர் குறிப்பிடும் வரிகள் மிக மிகக் குறிப்பிடவேண்டியவை. நாம் இப்படிப் பிறந்தது நமது தலைவிதி! ஏழைகளாய்ப் பிறந்தது அவர்கள் தலைவிதி! என்று ஆச்சாரியார் குறிப்பிடவில்லை. 'ஏதோ' என்ற அளவில், விட்டிருக்கிறார்.

ஏழையராய் கோழையராய் அலைகின்றனர்! இருக்க வீடில்லாத கோரம்! குடிக்கக் கூழுமில்லாத கூக்குரல்! எங்கு பார்த்தாலும் திருடு! களவு! கொலைகள்!!

வீதியிலே விபச்சாரம்! 'பிச்சையோ, பிச்சை!' என்ற வேதனைக் குரல். இந்தக் கேடு சகிக்க முடியவில்லை. சமுதாயம் ஒரு சாக்கடையாகிவிட்டது. அதிலே நெளியும் புழுக்கள்போலாகிவிட்டனர் மக்கள். நாட்டின் நிலைபற்றி நினைத்தால், கண்ணீர் புரளும்! ஏழை அழுகிறான். அவனது கண்ணீர் சொல்லும் கதைகள்—நெஞ்சைக் குலுக்கும்!

இந்த நிலையை, மந்திரிபீடம் விட்டு இறங்கியதும், நினைத்திருக்கிறார்போலும்—ஆச்சாரியார். ஏழையின்மீது பரிதாபம் கொள்ளவேண்டும் என்று உபதேசம் புரிகிறார்.

அவரது உபதேசத்தை பணமும் படைத்தோரும் அவர்தம் பிரதிநிதிகளான ஆட்சியாளரும் ஏற்பரா—ஏழைகள் துயர் துடைக்க முனைவரா, இன்னல் பறக்குமா, இன்பம் சுரக்குமா, என்ற சந்தேகங்கள் அரும்புகின்றன.

ஏழைகள் துயர் துடைப்பதாக எக்காளமிட்டு ஆட்சிபீடமேறிய காங்கிரசார், ஏழைகளை மறந்துவிட்டனர். மறந்தது மட்டுமல்ல, சமுதாயத்தில், ஏழைகள் கூட்டத்தை பல மடங்காக அதிகரித்துவிட்டனர். ஏழைகள் நிமிரவில்லை! அவர்களை நிமிர்க்கவேண்டிய 'பணம்' காங்கிரஸ் மந்திரிகளின் மாளிகைகளாக உருமாறிவிட்டது!

ஏழை இந்தியாவின் சுடுகாட்டின் மீது, இந்திய மந்திரிகள் இன்பமாளிகைகள் அமைத்துவிட்டார்கள்.

பிச்சையெடுக்கும் கூட்டம் மறையவில்லை. விபசாரம், ஒழியவில்லை. கொலையும் களவும் அதிகரித்துவிட்டன. ஏழைகள் 'எலி மலை'போல் உலவுகின்றனர்.

பணக்காரர் வீட்டு மாடி உயர உயர ஏழையின் குடிசைக் கீற்றுகள் நொறுங்கும்.

இது, காங்கிரஸ் ஆட்சியில் உலகறிந்த உண்மையாகிவிட்டது.

இந்திய சர்க்காரின், பணம்ஏழைகள் வாழ்வை வளமாக்குவதற்குப் பதில், வீணாகிய செலவு வகைகள் பற்றி எத்தனையோ முறை குறிப்பிட்டுள்ளோம்—நமது இதழில்.

இப்போது உலகையே அலறச் செய்யும் சில உண்மைகளை, அறிய வருகிறோம்.

இத்தகவல்களைத் தருவது ஒரு 'ஏனோதானோ' அல்ல; மிக மிகப் பொறுப்பு வாய்ந்தவர். இந்திய சர்க்காரின் வரவு செலவுக் கணக்குகளைப் பரிசோதிப்பவர்.

இந்திய சர்க்காரின் ஆடி
ஜெனரல், நரகரிராவ் என்பவர்,
வாரங்களுக்குமுன் ஒரு அறிக்
யொன்று விடுத்திருக்கிறார்.

அவரது அறிக்கை, காங்கி
சர்க்காரின் பித்தலாட்டத்
கோர்!சாட்சி.

அவர், இந்தியாவின் வரவு செ
வுக்கணக்குகளைப் பரிசோதிக்
அதிகாரம் உடையவர். அவரை
டிக் கேட்கவோ, எந்தமந்திரியா
இயலாது. ஏனெனில், அவருக்
அவ்வளவு அதிகாரம், அளிக்
பட்டிருக்கிறது, இந்திய அர
லமைப்புமூலம். ஆகவே, ''என்
என்ன செய்யமுடியும்?'' என்
துணிவோடு, இந்த உண்மைக
வெளிப்படுத்தியிருக்கிறார்.

இந்திய சர்க்காரின் வெளிநா
டுக் காரியாலயங்களைச் சுற்றி
பார்த்து அங்குள்ள வரவு செல
கணக்குகளைப் பரிசோதித்
வர வெளிநாடுகளுக்கெல்லாம் ே
லேயே சென்றிருந்தார்.

அதுபோது ஐரோப்பிய நா
களிலே ஒரு இடத்திலே உள்ள
எதுவென்று அவர் தெரிவிக்கவில்
தமது அறிக்கையில்—இந்திய
தூதுவராலயத்துக்குச் சென்
அங்குள்ள கணக்குகளைப் பரிசே
தனை செய்தாராம். அப்போதுகீழ்
காணும் உண்மைகள் கிடைத்த
வாம்.

ஒன்றல்ல, இரண்டல்ல ஏரா
மான ஒழுங்கீனங்களைக் கண்டே

1948 மார்ச்சில் ஏற்படுத்தப்பட்
அந்த தூதுவராலயம் ஆரம்ப முத
இப்படியே இருந்து வந்திருக்கிறது

தேவையானபோது பணத்
எடுத்துக்கொண்டு, கிடைத்தபோ
வைத்திருக்கின்றனர்.

பொய்க் கணக்குகள் எழுதியிரு
கிறார்கள்.

சொந்தச் செலவுக்குப் பணத்
ஏற்படும்போதெல்லாம் இப்படி
செய்திருக்கிறார்கள்.

ஒரு சமயம் ரூ 27000 இவ்வித
கையாளப்பட்டிருக்கிறது இப்படி
செய்தவர், அந்த நாட்டிலிருக்கு
நமது ஸ்தானிகர்தான்.

சினிமாவுக்குப் போக, சிகிரெ
வாங்க, பூ வாங்க, இதுபோன்ற சி
லரைச் செலவுகளுக்கெல்லாம் கா

யப் பணத்தைக் கையாண்டி ன்றனர்.

சிய ஜோதி 'நேரு'வின், நேரிய வையிலே இருக்கும் வெளி டுத் தூதுவராலயத்தின் நிலை, . இலட்சக்கணக்கில் பணம் கே, கரைந்திருக்கிறது—காட்டு ண்டித்தனமாக. இந்தக் கண்றா காட்சியை என்னென்பது!

ரம் தரும் வரிப்பணம், இவர் லீலாவினோதங்களுக்குச் செல ந்திருக்கிறது. வீண் பகட்டுக் , பொய், பித்தலாட்டம், திருட் கணக்கு முதலிய இழிசெயல் மேற்கொண்டிருக்கின்றனர்— திகாரிகள்.

ஏழைகள், இங்கே சாகிறார்கள் வர்கள் இதயம் எரிமலை ஆவதால் முதாபமேவெடிக்கிடங்காகிக்கிடக் றது. அவர்கள் வாழ்வில் மலர்ச்சி ய்ய வேண்டிய பணமோ, சில ளிப்பட்ட மந்திரிகளின் லீலா னோதங்களுக்கு செலவாகியிருக் றது.

தூதுவர்கள்ல்லவா! அதிலும் வெளிநாட்டிலே, மந்திரிகள் அந் ஸ்தோடு இருப்பவர்களாயிற்றே— னவே, எப்படி வாழ முடியும், விஸ்கி'யும், 'ஜின்'னும், வினோத மும், ஆட்டபாட்டமும் இல்லா ல், சிறு வீடு போதுமா—மாளி கையன்றோ தேவைப்படும்! மாளி கையை நிரப்ப, சாதாரண மேஜை நாற்காலிகள் போதுமா! ஒருசமயம், நேருவின் தங்கை விஜயலட்சுமி, ஷ்யாவில் ஸ்தானீகராகயிருக்கை யில் ஸ்விட்சர்லாந்திலிருந்து, பல லட்சரூபாய்களுக்கு மேஜை நாற் காலி சாமான்கள் வாங்கப்பட்டு, விமானமூலம் கொண்டு செல்லப் பட்டதே! அவர்கள் என்ன சாமான் பர்களா? இந்தியாவின் புகழ்பரப் பிகளாயிற்றே, நேருவின் கூற்றுப் படி. அவர்களுக்கு ஒரு மனைவி இருந்தால் போதுமா! காதல் கேளிக்கையில் ஈடுபட கனிமொழி கள் தேவைப்படாதோ? வயதான மனைவியோடு வாடவா செய்வார் கள்! புதிதுபுதிதாகக் கண்டுபிடித்து மது கலாச்சாரத்தையும் பரப்ப வேண்டாமோ? 'ஆகவே, லட்சம் லட்சமாக நம்முடைய வரிப் பணத்தை, கூத்திக்கும் கேளிக் கைக்குமாக, கரியாக்கியிருக்கின் றனர்.

இத்தகவலை ஆடிடர் ஜெனரல் நரகரி ராவ், மிகமிக வருத்தத்தோடு தெளிவாக்கியிருக்கிறார்.

* * *

சமுதாயத்தில் எத்திப் பிழைத்தவன், ஏழடுக்கு மாளிகையில் உலவுகிறான்—இறுமாந்து கிடக்கிறான். அவனது இறுமாப்பை அடக்கி ஏழைகளையும் உயர் நிலைக்குக் கொண்டுவரப்போவதாகக் கர்ஜனை எழுப்பிய காங்கிரஸ்காரர்களோ, இன்று ஏழைகள் கண்ணீரைத் துடைக்கக் கவலை கொள்ளவில்லை.

ஏழை—எப்போதும்போல அழுகிறான். அவனது உலகம், அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அங்கேயிருந்து வறுமையின் கொடுமையால், புற்றீசல்போல பிச்சை கேட்பவனும், திருடனாகுபவனும், வழுக்கி விழுபவளும், புறப்பட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். அதனால் நாடு, கேடாகிறது! நற்சோலை முட்புதராகிறது!!

இந்தக் கேட்டைக் களையப்போவதாக கர்ஜனை எழுப்பிய காங்கிரஸ்காரரோ, இதற்கான வழிவகைகளைக் காணவில்லை. முதலாளித்துவ மோகினி, அவர்களை மயக்கி, காலடியிலே வீழ்த்தி விட்டாள். பண ஆதிபத்யம், தன் காலடியிலே, காங்கிரசை வீழ்த்தி விட்டது!

பணம் படைத்தோன், தான் தரவேண்டிய வரிகளைத் தராமல் எத்துகிறான்—ஏமாற்றுகிறான். வருமான வரியைக் கூடச்சரியாகத் தருவதில்லை! தன் சாகசத்தால், ஆட்சியாளரை, வீழ்த்துகிறான்!!

இந்நிலையில், சட்டம், போலீஸ், என்கிற அம்புகள் மூலம், மத்யதர மக்களையும் ஏழைகளையும் மிரட்டி, வரிவரியாகக் கொண்டு குவித்துக் கொள்ளுகின்றனர் ஆட்சியாளர்.

இன்றைய ஆட்சியில் பணக்காரன் செலுத்தும் வரிகளைவிட ஏழையுலகம் செலுத்தும் வரிப்பணமே அதிகம்.

ஆனால், அந்த வரிப்பணமோ, ஏழைகள் வாழ்வை நிமிர்க்கப் பயன்படவில்லை. மந்திரிமார்களின் லீலாவினோதங்களுக்கு, உல்லாசப் பிரயாணத்துக்கு, கள்ளவழிகளில்செலவழிகிறது.

இந்தக் காட்சியைத் தான் நரகரி ராவ் தெளிவு படுத்தியிருக்கிறார்—தமது அறிக்கையில்.

ஒரு பக்கம்: முதலாளித்துவ முதலை—மற்றோர் பக்கம் சர்க்கார் திமிங்கிலம். இரண்டுக்குமிடையே, இன்று, மக்கள் திண்டாடுகிறார்கள்.

மாளிகை மண்மேடாகவில்லை! கூட கோபுரமாகிறது!!

குடிசை மண் மேடாகிறது! மண்ணுக்குள் புதைந்து கொண்டே போகிறது!!

பணக்கார உலகம் படாடோபமாகவே வாழ்கிறது!

ஏழைகள் உலகமோ, பிச்சைக்காரனையும், திருடனையும், கொலைகாரனையும் சிருஷ்டித்துக் கொண்டே இருக்கிறது!

மாளிகை—மந்தகாசம் செய்கிறது! குடிசை, கொந்தளித்து அழுகிறது!!

மாளிகை யேறினோர், மக்கள் தந்த வரிப்பணத்தை, நரகரி ராவ் அறிக்கைப்படி, விரயம் செய்கிறார்கள். அதாவது, இன்றைய மந்திரிமார்கள், தூதுவர்கள்,

போய் சோல்லி
ஏமாற்றி,
கள்ளத்தனமாக
செலவிடுகிறார்கள்!

ஆனால், இவர்கள் தண்டிக்கப்படவில்லை—சட்டமும் போலீசும் போகவில்லை. நீதிமன்றம், ஏற்றப்படவில்லை. ஆனால், வாழ முடியாத காரணத்தால், அலைந்தும் அரை வயிறு கஞ்சியும் அகப்படாத காரணத்தால், ஏழை,

போய் சொல்லுகிறான்
ஏமாற்றுகிறான்
கன்னமிடுகிறான்.
கெட்டவனாகிறான்!

(அடுத்த பக்கம் பார்க்க)

வாழ்த்துகிறோம்

புதுமலர்ச்சி எழுத்தாளரும், சேலம் மாடர்ன்தியேட்டர்ஸ்உதவி டைரக்டராகப் பணியாற்றி வருபவருமான நண்பர் கோத. சண்முக சுந்தரம் கடந்த 11—11—51 அன்றுதோழியர் பகவதி B. Sc.,யை வாழ்க்கைத் துணைவியாக, திருவாரூருக்கருகிலுள்ள வேளுக்குடியில் ஏற்றார் என்ற செய்தி அறிய மகிழ்கிறோம். வாழ்வுவிழா பெறும் இளம் இதயங்களை வாழ்த்துகிறோம்.

★ செய்யலாமே! ★

"நல்ல பாதை போட முடிய வில்லை!"

"தண்ணீர் வசதி செய்துதர பண மில்லை!"

"குப்பை கூட்டும் வண்டிகளை அதிகரிக்க ஆசைதான், என்ன செய்வது?"

"சர்க்காரைக் கேட்டோம். பண மில்லையென்று கைவிரித்துவிட்டார்கள்!"

இதுபோல, பற்பல காரணங்களைக் காட்டுகின்றன, ஆங்காங்குள்ள நகரசபைகளைப் பார்த்து நம் போன்றார் கேட்டால்.

உண்மையில், பல ஸ்தல ஸ்தாபனங்கள், பணச்சங்கடத்தால், நகர மக்களுக்கு வேண்டிய நலன்களைச் செய்துதர முடியாமல், திண்டாடுகின்றன.

நகரசபைகளுக்கு வரும் முக்கிய வருமானமெல்லாம் — வீட்டு வரி மூலம் வருவதுதான். இதைக் கொண்டே, பெரும்பாலும், எல்லாவற்றையும் அவைகள் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது.

இதுபற்றி ஆராயப் புகுந்த இந்திய ஸ்தல ஸ்தாபன விசாரணைக் குழுவினர் ஏழு மாதங்களுக்கு முன் யோசனை ஒன்றை வெளியிட்டிருந்தனர்.

"மாகாண சர்க்காருக்குச் சொந்தமாக இருக்கும் சொத்துக்களின்மீது வரி வாங்கவேண்டும்."

அந்த யோசனை, பல மாகாணங்களில் இப்போது நடைமுறையிலிருந்து வருகிறது.

ஆனால், மேற்படி யோசனையோடு கூட, இன்னொன்றும் சொல்லியிருந்தனர்.

டில்லி மத்ய சர்க்காருக்குச் சொந்தமான சொத்துக்களுக்கும் வரி விதிக்கும் அதிகாரம் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு இருக்கவேண்டும்."

இந்த யோசனையை டில்லி நிறைவேற்றவில்லை—இன்னும். காரணம் இந்திய அரசியலமைப்புமூலம், இந்த விதி செல்லுபடியாகாமற் செய்யப்பட்டுவிட்டது. 285 (1) வது பிரிவில், இதுபற்றி: "ஒரு மாகாணத்துக்குள்ளிருக்கும் எவராலும்— பார்லிமெண்டு முடிவை மாற்றும் வரை—யூனியன் சர்க்காரின் சொத்துக்களுக்கு வரி விதிக்கக்கூடாது" என்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதனால், ஸ்தல ஸ்தாபனங்கள் வரி வசூலிக்கமுடியாது.

பார்க்கப்போனால், ஆங்காங்கும் மாகாண சர்க்காரைப்போல மத்திய சர்க்காருக்கும் ஏராளமான இடங்கள் இருக்கின்றன — தபாலாபீஸ் ரயில்வே ஸ்டேஷன், வருமான வரி ஆபீஸ் ஆகியவைகளைப்போல.

இவைகளி லிருந்தெல்லாம் வரி வசூலித்தால், நகர சபைகளுக்கு ஓரளவு வருமானம் வரச் செய்யும்.

இதற்கான வழிவகைகளில் ஸ்தல ஸ்தாபனங்கள் ஆலோசனை செய்ய வேண்டும். டில்லியை வற்புறுத்தி, அதற்கான திருத்தத்தை அரசியலமைப்பில் செய்யவேண்டும்.

மாகாண சர்க்காருக்கில்லாத சலுகை, மத்திய சர்க்காருக்குமட்டும் ஏனிருக்கவேண்டும்!

'பணமில்லை' என்று திண்டாடும் நகரசபைகள், இந்த முயற்சியில் ஈடுபட்டு ஒரு வழி காணலாமே!

★

(முன்பக்கத் தொடர்ச்சி)

அவனை சட்டம் சீறுகிறது; த... டிக்கிறது, சிறைக்குள்ளே ... துப் பூட்டுகிறது; சித்ரவதை ... கிறது.

ஆட்சியிலமர்ந்தோர், மாளி... யானோர், படுக்கையறை... பளிங்குக்கல் பதிக்க, பொது... பணத்தைக் 'கொள்ளையிடுகி... கள்!' ஆனால், ஏழையோ வயிற்... கில்லாததால், திருடுகிறான் ... இலட்சக் கணக்கில், மாளிகை... வாசிகளைப் போல அல்ல; ரூபா... கணக்கில், அணுக்கணக்கில்—அ... வும் கிடைக்காத இடத்தில் ... சோற்றுப்பானை! பழைய கந்... புளி மிளகாய் வரிசையில்!!

ஒய்யாரமாகத் திருடுபவன், ச... தாயத்துக்கு தீங்கு செய்பவ... பிறரை வாழவிடாது தடுப்பவ... உல்லாசத்தோடு உலவுகிற... உழைத்தும் வழியில்லா... கைகாலிருந்தும் உழைக்க வே... யில்லாது, திண்டாடுபவன், திரு... ளுகிறான்—தண்டிக்கப்படுகிறான்.

சமூகத்தை இரு கூறுக்கும், இ... தப் பழி என்று நீங்கும்? என்று வி... கும், இன்றைய சமூகஆட்சிமுறை...

புதுவாழ்வு, மலர்வது என்றை... தினம்?

★

கொள்கை முரசு ஒலிக்கிறது!

ஆங்கிலத்தில் நமது கொள்கை விளக்கம் பற்றிய முதலேடு.

⁂

சிறந்த கருவூலம்.

⁂

A PLEA for UNDERSTANDING

தீட்டியது: எஸ். வேதரத்னம், எம். ஏ.

விலை ரூ. 0—8—0

மாற்றார் மன இருள் போக்கி, மதி விளக்கம் தரும் அரிய நூல்

⁂

சிந்தனைப் பெட்டகம்.

⁂

வான்கார்ட் பப்ளிஷிங் ஹவுஸ் : : திராவிடநாடு நிலையம், காஞ்சிபுரம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

ஆயிற்றே! மேனாட்டு நாகரீகம் எனக்கும் தெரியும் என்பதை மறந்து பேசுகிறாய்!

நானொன்றும் மறக்கவில்லை. மேனாட்டு நாகரீகத்தை நீங்கள் நன்றாய் அறிந்தவர்களாயிருந்தால், முன் தடவை அமெரிக்கா வந்த பொழுது, ஏன் எல்லாப் பெரிய மனிதர்களிடமும் நன்றாகச் சிநேகம் செய்துகொள்ளவில்லை? எத்தனை பேர் கோடீசுவரர்கள் உங்களுக்களித்த விருந்தில்கலந்துகொள்வதாக வந்து உங்களைச் சந்தித்தார்கள்! அவர்களை உங்கள் வலையில் போட்டுக்கொள்ள முடிந்ததா? என்னுடைய முயற்சியாலல்லவா அவர்கள் உங்களைப் பார்க்கவந்தார்கள்! நீங்கள் போனபிறகு, நான் அவர்களைச் சாந்தப்படுத்த, என்னென்ன முறைகளைக் கையாள வேண்டியிருந்தது என்பதை அறிந்தால், நீங்கள் என்மீது பரிதாபப் படும்படி நேரிடும்.

நான் ஒன்று கேட்டால், நீ ஏதோ வேறொன்றுக்குப் பதில் சொல்லுகிறாய். ஆடம்பரச் செலவுகள் நீ அதிகம் செய்துவந்தாய் —அரசாங்கப் பணத்தைக்கொண்டு —என்பதை எல்லோரும் கூறுகிறார்களே! அதை நீ எப்படி மறுக்க முடியும்? நமது அரசாங்க மாளிகை முழுவதும் ஒரே "வெல்வெட்" மயமாக இருக்கிறதாமே! ஆயிரக் கணக்கான டாலர்களைக் கொட்டி சோபாக்கள் வாங்கினாயாமே! இம் மாதிரி விஷயங்களில் கொஞ்சம் நிதானமாக நடந்து கொண்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்!

குந்துவதற்கு மரநாற்காலிகூட இல்லாத தரித்திரியங்கள் கத்துவதை ஒரு ஆதாரமாக வைத்துக் கொண்டு இப்படியெல்லாம். என் மீது கோபித்துக்கொள்ளுகிறீர்களே! அமெரிக்க நாட்டில், இம்மாதிரி சோபாக்களும், ரத்தினக் கம்பளங்களும் உபயோகிப்பது சர்வ சாதாரணமென்று உங்களுக்குத் தெரியாதா? ஏதோ வேறு விஷயத்தில் என்மீதுள்ள அதிருப்தியைக் காட்டுவதற்காக, இந்தச் சின்ன விஷயங்களையெல்லாம் சொல்லி,

உனக்குச் சின்ன விஷயமாகத் தோன்றுவது, எனக்குப் பெரிய விஷயமாக இருக்கிறது. உன்னை ரஷ்யாவிற்கு அனுப்பியபொழுதும், கெட்ட பெயருடன்தான் திரும்பி வந்தாய்! இந்தியாவிலேயே வைத்துக்கொண்டால் உன்பெயர் கெட்டு விடுமென்று நினைத்துதான்உடனே அமெரிக்காவிற்கு அனுப்பினேன்.

ஓகோ! அப்படியா விஷயம்! ரஷ்யாவை மனதில்வைத்துக்கொண்டா இத்தனை நேரம் என்னுடன் விதண்டாவாதம் செய்தீர்கள்! என்னை முதலில் புகழ்ந்ததெல்லாம் வெறும் வஞ்சப் புகழ்ச்சிதானா? அந்தப் பாவி ஸ்டாலினை எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. என்னைப் பற்றி யாரோ அவனிடம் தாறுமாறாகச் சொல்லி வைத்திருக்க வேண்டும்! அவனை நான் ஒரு தடவைகூடப் பார்த்துப் பேச முடியவில்லை. பேசியிருந்தால்அவன் என் காலடியில் விழுந்திருக்கமாட்டானா?

உன்னைப் பார்த்தால் பரிதாபப் படுவதற்குப் பதிலாக, எனக்குச் சிரிப்புதான் வருகிறது. மேனகையைக் கண்டு மயங்கின விஸ்வாமித்திரன் மாதிரிதான் ஸ்டாலின், என்று நினைக்கிறாய்? மஹா விஷ்ணுவே மறுபடியும் மோஹினி அவதாரம் எடுத்து, தனது இயற்கை வடிவில் எதிரே தோன்றினாலும், நிமிர்ந்துகூடப் பார்க்கமாட்டானே அவன்!

ஏன் மட்டரகத்தில் இறங்கி விட்டீர்கள்? என் அழகைப் பற்றியா, இப்பொழுது, நான் உங்களிடம் பெருமையடித்துக் கொண்டேன்? ஸ்டாலினைச் சந்திப்பதற்கு எனக்கு ஒரு அவகாசம் கொடுத்திருந்தால், எனது ராஜதந்திர வார்த்தைகளைப் பிரயோகித்து, அவன் என்னை நம்பும்படி செய்திருப்பேன், என்ற பொருளில்லல்லவா நான் பேசினேன்!

இப்பொழுதுதான் நீ நாணயக் குறைவாகப் பேசுகிறாய், கொஞ்சங் கூடக் கண்ணியமற்ற முறையில். உண்மையிலேயே உனக்கு ஏதாவது மதிப்புக் கொடுக்க வேண்டுமானால் உன்னுடைய அழகிற்காகத்தான். கொஞ்சம் வயதாகிவிட்டதென்றாலுங்கூட அழகுக்களை இன்னும் உன்னைவிட்டு நீங்கவில்லை.

ஆனால், ராஜதந்திரம், உனக்குச் சுட்டுப்போட்டால் கூட வராது. ஏன் பிதற்றுகிறாய்?

அப்படியென்றால், நான் இது வரை செய்த ராஜ தந்திரங்களெல்லாம், தோல்வியுற்றன என்று கூறுகிறீர்கள்?

அதில் சந்தேகமேயில்லை. ரஷ்யாவிற்கு, நம்மீது, அதிருப்தி ஏற்படக் காரணமே நீதான். நீ அமெரிக்காவில் இருந்த பொழுது, அடிக்கடி ரஷ்யாவைத் தாக்கிப் பேசியது அனாவசியம்.

அப்படிப் பேசியதால்தானே நான் அமெரிக்கர்களுடன் சிநேகமாக வாழ முடிந்தது!

இந்த முறையில் ஏற்படுத்திக் கொள்ளும் சிநேகம் எத்தனை நாளைக்கு நீடிக்கமுடியும்? தவிரவும், இந்த முறையைக் கையாள்வதற்கு நீதான் வேண்டுமென்ற அவசியமும் கிடையாதே! யாரை வேண்டுமானாலும் அனுப்பி, இந்தக் கைங்கரியத்தைச் செய்யச் சொல்லலாமே!

பெண்ணென்றும், உங்கள் கூடப் பிறந்த தங்கை யென்றுங்கூடப் பார்க்காமல், என்மீது இம்மாதிரி அபாண்டமான பழியை நீங்களே சுமத்துகிறீர்கள். எனக்கு அழுகை வருகிறது — உங்களுடன் இனிப் பேச இஷ்டமில்லை.

இந்தா கைகுட்டை, கண்களைத் துடைத்துக்கொள். நீ அழவேண்டிய அவசியமே கிடையாது. ஏனென்றால், உன்னைப் பெருமைப் படுத்தும் முறையில்தான், நான் ஒரு அரசாங்க அறிக்கை விடப் போகிறேன்.

* * *

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் தனது அமெரிக்க ஸ்தானிகர் பதவியை ராஜிநாமா செய்ததை அங்கீகரித்து, பிரதம மந்திரி பண்டித நேரு அவருக்குப் பின்கண்ட கடிதம் எழுதியிருக்கிறார்.

"நீங்கள் உங்கள் கடமையை மிகத் திறமையுடன் செய்து முடித்திருக்கிறீர்கள். இதன் மூலம், நம் நாட்டு மக்கள், அமெரிக்க மக்கள், இவர்களெல்லோருடைய ஆதரவையும், நன் மதிப்பையும் உங்களால் பெற முடிந்தது. இது, நீங்கள் பெருமைப்படக் கூடிய சாதனையாகும்."

—பத்திரிகைச் செய்தி.

திராவிட முன்னேற்றக் கழக
மாநில மாநாடு

மாநில மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாக மாபெரும் ஊர்வலம் நடத்த அனுமதி கோரப்பட்டுள்ளது.

மாநில மாநாட்டில் நமது எல்லா கிளைக்கழகங்களின் கொடிகளையும் ஒரு இடத்தில் இருக்கச்செய்து நமது வளர்ச்சியின் படப்பிடிப்பாக்கவும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

மாநில மாநாட்டு பந்தலிலேயே, டெலிபோன் தந்தி, தபால், தனி நிலையங்கள் அமைத்திடவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

நகரின் பல பகுதிகளிலிருந்தும் வரவும், மீண்டும் திரும்பவும் வசதியாக அதிக பஸ்கள் விடவும், இரவில் கலை நிகழ்ச்சிகள் முடிந்த பிறகும் பஸ் வசதி செய்யவும் போக்குவரத்து அதிகாரிகளுக்கு எழுதிக் கேட்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி, கோவை, திருச்சி முதலிய இடங்களிலிருந்து தனி புகைவண்டிகள் விட அனுமதி வேண்டி, ரயில்வே தலைமை அதிகாரிக்கு எழுதிக் கேட்கப்பட்டிருக்கிறது.

எல்லா நாட்டு தூதுவராலயங்களுக்கும் நம் மாநாட்டு நிகழ்ச்சி பற்றிய குறிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன.

எல்லா செய்தி இலாகாக்களிலிருந்தும் தனி நிருபர்கள் வரவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்னும் தொடர்ந்து மாநாட்டு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

விளம்பரக் குழு.

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்
டிச 13, 14, 15, 16 நாட்களில் நடைபெறும்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95. Tirukkachinambi St., Kancheepuram.